மக்கள் விரோத ஒன்றிய அரசின் போக்கைக் கண்டித்து தொழிற்சங்கங்கள் இன்று நடத்தும்

பொது வேலைநிறுத்தத்தை வெற்றி பெறச் செய்வீர்!

தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!

சென்னை, பிப்.12-

தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய பா.ஜ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் 100 ஆண்டுகளாக இந்தியாவில் செயல்பட்டு வந்த 44 தொழிலாளர் நலன் சார்ந்த சட்டங்களில் 29 சட்டங்களை இணைத்து 4 தொகுப்புச் சட்டங்களாக வடிவமைத்து வரைவு நகல் அனைத்து தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்டு அதன் மீது மத்திய தொழிற்சங்கங்கள் தங்களின் ஆட்சேபனைகளை, திருத்தங்களை அனுப்பி வைத்தும், அவை ஏற்கப்படா மல் இத்தொகுப்பு சட்டம் தொடர்பாக இந்திய தொழிலாளர் மாநாட்டில் விவாதிக்கப்படவில்லை. தொழிலாளர் நலன் இந்திய அரசியல் சாசனத்தின் ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளதால் மாநில அரசுகளிடம் உரிய கலந்தாய்வுசெய்யப்படவில்லை. பாராளுமன்றத்தில் நிலைக்குழுவில் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள், திருத்தங்கள் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் விவாத மின்றியே இத்தொகுப்புச் சட்டங்களை நிறைவேற்றப்பட்டுள்ளது.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட இந்த தொகுப்புச் சட்டங்கள் நமது எதிர்ப் பின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், ஒன்றிய அரசு 2025 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் தேதி இச்சட்டங்கள் நடைமுறைக்கு வரும் என அறிவிப்பு செய்துள்ளது. எந்தவொரு சட்டமானாலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஒன்றிய அரசு விதிகளை இயற்ற வேண்டும். ஆனால் ஒன்றிய அரசு விதிகளை டிசம்பர் 30 நாளிட்ட அறிவிக்கை மூலம் வெளியிட்டுள்ளது. 45 நாட்கள் கருத்து கேட்பிற்குப் பின்னர் ஆட்சேபனை திருத்தங்கள் தொடர்பாக விவாதித்து அதன் பின்னர் விதிகள் இறுதி செய்யப்பட வேண்டிய நடைமுறை உள்ளது. அதன் காரணமாக தற்போது சட்டம் நடைமுறைக்கு வரும் என்று அறிவித்த பின்னரும், சட்டத்தை நடைமுறைப்படுத்த இயலாத தேக்க நிலை ஏற்பட்டுள்ளது.

ஒன்றியத்தில் உள்ள பல மாநில அரசுகள் விதிகளை உருவாக்கி இறுதி செய்யவில்லை என்பதால், மாநிலங்கள் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஒரு சிக்கலை உருவாக்கி உள்ளது.

இத்தொகுப்புச் சட்டங்கள் பன்னாட்டு பெருமுதலாளிகள் இந்நாட்டு தொழிலதிபர்கள் இலகுவான வர்த்தகம் செய்யும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் தங்களின் பணி நியமனம், பணியிடப் பாதுகாப்பு, பணிப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ளிட்டவைகளை பெறுவதற்கும், நியாயமான ஊதியம் மற்றும் போனஸ் போன்றவைகளை பெறுவதற்கு என தங்களுக்கான தொழிற்சங்க அமைப்பை உருவாக்கிக் கொள்ள 1926 தொழிற்சங்கச் சட்டம் வகை செய்கிறது. தற்போது உருவாக்கப் பட்டுள்ள தொகுப்புச் சட்டங்கள் முந்தைய சட்டத்தை பலவீனப்படுத்துகிற வகையில் 10 சதவிகித தொழிலாளர்கள் அல்லது 100 தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்தால் மட்டுமே தொழிற்சங்கத்தைப் பதிவு செய்ய இயலும் என்பதும், தொழிற்சங்கத் தகராறுகளை தீர்க்க தீர்ப்பாயம் அமைப்பதும், தொழிற்சங்கங் களின் பதிவை ரத்து செய்வதற்கும் வகை செய்யும் பிரிவுகள் உள்ளன. தொழிற்சங்க அங்கீகாரம் பெறு வதற்கு வருகைப் பதிவேட்டில் உள்ளவர்களில் 51 சதவிகிதம் ஆதரவு இருந்தால் மட்டுமே அங்கீகாரம் என்ற நிலையும் 20 சதவிகிதமான ஆதரவு இருந்தால் சமரச குழுவிற்கு ஒரு அங்கத்தினர் வீதம் தேர்ந்தெடுக்கலாம் என்பவை ஆபத்தமான அம்சங்களாகும்.

தொழிற்சங்க உறுப்பினர் எண்ணிக்கை 10 சதவிகிதத்திற்கோ அல்லது 100 தொழிலாளர்கள் எண்ணிக்கைக்கோ குறையாமல் எல்லா நேரங்களிலும் பராமரிக்கப்பட வேண்டும். இல்லையேல் பதிவு ரத்தாகி விடும் என்பது தொழிற்சங்க இயக்கத்தை முடமாக்கும் செயலாகும்.

தற்போது நடைமுறையில் உள்ள நிலையாணைகள் சட்டப்படி 100 தொழிலாளர்கள் இருந்தால் அந்த நிறுவனத்திற்கு நிலையாணை உருவாக்க வேண்டும் என்பது நியதியாகும். தற்போது இத்தொகுப்புச் சட்டங்களில் 300 தொழிலாளர்கள் அதற்கு மேலும் தொழிலாளர்கள் இருந்தால் மட்டுமே நிலையாணை சட்டம் நடைமுறைப்படுத்த முடியும் என்கிற அபாயத்தை ஏற்படுத்துகிறது.

இந்திய நாட்டில் சற்றே றக்குறைய சிறு, குறு நடுத்தர தொழில்கள் என 80 சதவிகிதமான தொழிற்சாலைகளில் 300க்கும் குறைவான தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இத்தொழிற் சாலைகளில் பணிபுரியும் கோடிக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைநேரம், பணியிடப் பாதுகாப்பு, குற்றச்சாட்டு களின் மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கை, ஆலை மூடல், ஆட்குறைப்பு மற்றும் ஆலை செயல்பாட்டை தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் போன்றவைகளுக்கு அரசின் அனுமதி பெற வேண்டும் என்கிற கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதால் பெரும் பகுதியான தொழிலாளர்கள் முதலாளிகளால் "அமர்த்து, துரத்து" என்கிற அபாயமான கட்டத்திற்கு தள்ளப்படுகிறார்கள்.

இத்தொகுப்புச் சட்டத்தில் பணியாளர், தொழிலாளர், கட்டுமானத் தொழிலாளர், ஒப்பந்தத் தொழிலாளர், ஜிக் தொழிலாளர்கள் என தொழிலாளர்களை வேறுபடுத்தி விளக்கங்கள் அளிக்கப்படுகிறது. இதன் காரணமாக ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நீதிமன்றத் தீர்ப்புகளில் அளிக்கப்பட்டுள்ள தொழிலாளர், பணியாளர் என்கிற நிலைகளிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கு 15வது இந்தியத் தொழிலாளர் மாநாடு, நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவைகளை கணக்கில் கொள்ளாமல், குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கிற முறையும், தேசிய குறைந்தபட்ச தள ஊதியம் நிர்ண யிக்கிற சூழலும் இத்தொகுப்புச் சட்டங்கள் மூலம் புகுத்தப்படு கிறது. குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயத் திற்கு கலந்தாலோசனை செய்ய தற்போது உள்ள குழுக்களில் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு இடம் உள்ளது. ஆனால் தொகுப்புச் சட்டத்தில் அத்தகைய ஆலோசனைக் குழுக்கள் இன்றியே அறிவிக்கை மூலமாகவே குறைந்தபட்ச ஊதியத்தை அரசு நிர்ணயிக்க இத்தொகுப்புச் சட்டம் வழி செய்கிறது.

இத்தொகுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது பெண்களுக்கு அதிகாரம் அளிக்கிறோம் என பறைசாற்றிக் கொள்ளும் பா.ஜ.க. அரசு சம வேலைக்கு சம ஊதிய சட்டத்தில் ஆலோசனைக் குழுவில் ஏற்கெனவே உள்ள சட்டப்படி 50 சதவிகிதம் பெண்கள் இருக்க வேண்டும் என்பதை தற்போது உள்ள புதிய தொகுப்புச் சட்டத்தில் 33 சதவிகிதமாக பெண்களின் பங்கை குறைத்துள்ளது.

இந்நிலையில் பெண்களுக்கு அதிகாரம் அளிக்க முடியும் என்பதும் கேள்விக் குறியாக உள்ளது. வேலை நேரம் 8 மணி நேரம். ஆனால் வாரத்தில் எத்தனை மணி நேரம் வேலை என்பதை இத்தொகுப்புச் சட்டம் தெளிவு படுத்தவில்லை. மேலும் வேலை நேரத்தை மாற்றியமைக்க இனி சட்டத் திருத்தம் செய்ய நாடாளுமன்றத்தின் அங்கீகாரமில்லாமலே அரசு அறிவிக்கை மூலம் பணி நேரத்தை உயர்த்துவதற்கான வாய்ப்பை இத்தொகுப்புச் சட்டங்கள் உருவாக்கி உள்ளது.

ஆகவே, நீண்ட நெடுங் காலம் போராடி நம்முடைய தொழிற்சங்க முன்னோர்கள் பெற்ற உரிமைகளை சர்வதேச தொழிலாளர் அமைப்பு பரிந்துரையின் மூலம் கிடைக்கப் பெற்ற சட்டப் பாதுகாப்புகளை இத்தொகுப்புச் சட்டங்கள் பறித்துள்ளது என்பதும், மின்சார சட்டம் திருத்தப்பட்டால் மின்சார உற்பத்தி, விநியோகம் தனியார் மயமாகும். விவசாயிகளின் விளைபொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிப்பதற்கு தொடர்ந்து ஒன்றிய அரசு மறுத்து வருகிறது. விதைகள் சட்டத்தை திருத்துவதன் மூலம் சிறு, குறு விவசாயிகள் தங்கள் சொந்த பயன்பாட்டிற்கு வைத்துள்ள விதைகளை கூட அவர்கள் பயன் படுத்த இயலாத அபாயத்திற்கு விதைகள் திருத்தச் சட்டம் வழிவகுக்கிறது. பன்னாட்டு முதலாளிகள் மரபணு மாற்று விதைகளை வழங்கினால் அதனை ஏற்று ஒவ்வொரு ஆண்டும் விவசாயம் செய்ய விதைக்காக பெருமுதலாளிகளின் தயவை நாடியிருக்க வேண்டிய அபாயத்தை ஒன்றிய அரசு உருவாக்க முயல்கிறது.

அமெரிக்க நாட்டோடு செய்து கொண்ட வர்த்தக ஒப்பந்தத்தில் அமெரிக்காவில் உற்பத்தியாகும் விவசாயப் பொருட் களை இறக்குமதி செய்தால் இந்திய நாட்டு விவசாயிகள் உருவாக்கும் விவசாயப் பொருட்களுக்கு நியாயமான சந்தையும், விலையும் கிடைக்காமல் போகும் அபாயம் உள்ளது. இத் தொகுப்பு சட்டங்களால் தொழிலாளர், விவசாயிகள், மக்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதை பா.ஜ.க. அரசுக்கு உணர்த்தும் வகையில் மத்திய தொழிற்சங்கங்கள், தொழில்வாரி அமைப்புகள், விவாசய அமைப்பு கள் இணைந்து அறிவித்துள்ள பிப்ரவரி 12 நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்தை வெற்றி பெறச் செய்வது அவசரமும், அவசியமும் நிறைந்தது ஆகும்.

இந்திய நாட்டுத் தொழிலாளர்கள், குறிப்பாக தமிழகத் தொழிலாளர்கள், விவசாயிகள் பெரும் பகுதியாக வேலைநிறுத்தத்தில், மறியலில் பங்கேற்க வேண்டுமென தொ.மு.ச. பேரவை சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

"புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.61, ரங்காச்சாரி தெரு மாநகராட்சி விளையாட்டுத் திடலில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 41.00 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உடற்பயிற்சிக் கூடத் திட்டப் பணி குறித்து ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

சி.எம்.டி.ஏ. சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும்

10 முதல்வர் படைப்பகங்கள் பிப்.25-க்குள் பயன்பாட்டிற்கு வரும்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, பிப்.12-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (11.2.2026) தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதி, அசோக் நகர், 11வது அவென்யூவில் உள்ள முழுநேர நூலகம் மற்றும் அண்ணா நகர் கிழக்கு முழுநேர நூலகத்தை சிஎம்டிஏ சார்பில் "முதல்வர் படைப்பகங்களாக" மேம்படுத்தப்பட்டு வரும் முன்னேற்றப் பணிகள் குறித்து இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கூட்டரங்கில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு தலைமையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முடிவுற்றப் பணிகளை திறப்பு விழா முன்னேற்பாடு குறித்தும், நடைபெற்றுவரும் பணிகளை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவது குறித்து அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மேலும், அமைச்சர் வி.க. நகர் சட்டமன்ற தொகுதி, பெரம்பூரில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் முரசொலி மாறன் பூங்காவின் முன்னேற்றப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 25 முதல்வர் படைப்பகங்கள் சென்னையில் பல் வேறு இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 3 முதல்வர் படைப்பகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் அதிக அளவில் முதல்வர் படைப்பகங்களை பயன்படுத்தியும், பயனடைந்தும் வருகின்றனர். சென்னை, அசோக் நகரில் ரூபாய் 15 கோடி செலவில் 15,118 சதுர அடி கட்டடப் பரப்பளவில் பிரமாண்டமான முதல்வர் படைப்பகம் அமைக்கப்பட்டு, இம்மாதம் 25-ம் தேதிக்குள் திறக்கப்படும். அதேபோல் சென்னை, அண்ணாநகரிலும் ரூபாய் 18 கோடி செலவில் 25,784 சதுர அடி கட்டடப் பரப்பளவில் மிகவும் பிரமாண்டமான ஒரு முதல்வர் படைப்பகம் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற 25-ம் தேதிக்குள் 10 முதல்வர் படைப்பகங்கள் கல்வியாளர்கள் மற்றும் மாணவர்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும். இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சிஎம்டிஏ உறுப்பினர்/முதன்மைச் செயலாளர் செயலர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் சிவஞானம், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, கூ.பி.ஜெயின், கண்காணிப்புப் பொறியாளர்கள் பாலமுருகன், ராஜன்பாபு, தம்பிரான், சரவணன், மாவட்ட நூலக அலுவலர் முனைவர் மு.கவிதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 357 வது நாள்!

அம்பத்தூர் தெற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, பிப்.12-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 357 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (11.2.2026), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 87, வன்னியர் தெரு, பாடி, சென்னை. 2) வட்டம் 89, ஆபிஸர் காலனி, பார்க் அருகில், ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப்.மோகன், டாக்டர். பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி. நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் தெற்கு/வடக்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருச்சி மா. பாலகிருஷ்ணன்
பிப்ரவரி 12 (2010)

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.

திருச்சி மாவட்டக் கழகப் பொருளாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

புரவலர் அன்பிலாருடன் இணைந்து பணியாற்றி பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

திருச்சி நகர்மன்றத் தலைவராக திறம்பட பணியாற்றி, மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தி.மு.க. சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக வாழ்நாளின் இறுதிவரை இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
145	மே.பொ / இ-II / வ.செ.அ.மி.நி-1	SE M II Circle ECHS Dn Renewal and strengthening of trestles No TR12 and TR14 BCN 40A 40B
354	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1	Procurement of Membrane element for RO plant
355	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1	Journal Spring Assembly for HP 803
358	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1	Bellow with control units for CWP discharge pipe lines
267	மே.பொ / இ-I / வ.செ.அ.மி.நி-2	MI Circle BM Unit II Attending Preventive Breakdown maintenance work
250	மே.பொ / இ-I / வ.செ.அ.மி.நி-2	MI Circle BM Unit I Attending Preventive Breakdown maintenance work
155	மே.பொ / இ-2 / வ.செ.அ.மி.நி-2	M II circle AHP FAHS Routine Maintenance of 60 MT weigh bridge Mechanical Electrical
280	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2	Procurement of carbon steel seamless pipes and fittings
04	மே.பொ. / பே.பி.எ.மி.சு.நி	Housekeeping such as sweeping and cleaning etc of buildings in BBGTPS for a period of 2 years

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/959/ஒப்பந்தப்புள்ளி/2026

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மாங்காடு எம்.வி. சோலையப்பன்
பிப்ரவரி 12 (1972)

கழகம் துவக்கிய காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்று, காங்கிரஸ் ஆட்சியில் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி தமது பகுதியில் கழகம் வளர்த்த தளகர்த்தர்களில் ஒருவர்.

தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றவர்.

மாங்காடு பேரூராட்சி தலைவராகவும் – குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். கழகத்தின் முதல் ஒன்றியப் பெருந்தலைவர் என்ற சிறப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். தன் இறுதிகாலம் வரை கழகத்திற்காக பாடுபட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.